# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

அ.வ.எண். 09/2012, வா.சா. 2. ரமேஷ்

2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ம் தேதியில் வாதி தரப்பு சாட்சியாகிய, வா.சா.2 ஆன ரமேஷ் என்பவரின் வாக்குமூலம் (1969 ஆண்டு 44 வது விதியின்படி) திருமதி. R. சுஜாதா., B.Sc., L.L.M., முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி அவர்களால் ஆணையிட்டு உறுதியளிக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | – | ரமேஷ் | தொழில் | – | |
| த/பெ க/பெ | – | வேலுச்சாமி | ஜாதி | – | |
| கிராமம் | – | வடசித்தூர் | வயது | – | 47 |
| தாலூக்கா | – | கிணத்துக்கடவு | தேதி | – | 12.11.2025 |

முதல் விசாரணை

நான் வடசித்தூர் கிராமத்தில் குடியிருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய நிரூபண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும்.

| Sl.No. | Date | Exhibits Marked | Description | Remarks |
|---|---|---|---|---|
| 1 | 07.06.1961 | **வா.சா.ஆ.4** | பாக சாசனம் | சான்றிட்ட நகல் |
| 2 | 13.03.1995 | **வா.சா.ஆ.5** | 1 ம் வாதி பெயரில் உள்ள கிரய ஆவணம் | சான்றிட்ட நகல் |
| 3 | 07.07.2010 | **வா.சா.ஆ.6** | பாகசாசனம் | சான்றிட்ட நகல் |
| 4 | 27.12.2011 | **வா.சா.ஆ.7** | வீட்டு வரி ரசீது | அசல் |
| 5 | 27.12.2011 | **வா.சா.ஆ.8** | குடிநீர் வரி ரசீது | அசல் |
| 6 | 16.09.2011 | **வா.சா.ஆ.9** | தகவல் அறியும் உரிமைச்சட்டப்படி 3 ம் பிரதிவாதியிடமிருந்து | சான்றிட்ட நகல்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பெறப்பட்ட ஆவணங்கள் | |
| 7 | 09.12.2011 | **வா சா ஆ 10** | முதல் தகவல் அறிக்கை (FIR No.412/2011) | ஒளி நகல் |
| 8 | 26.12.2011 | **வா சா ஆ 11** | வில்லங்க சான்று | ஆன் லைன் நகல் |
| 9 | | **வா சா ஆ 12** | புகைப்படங்கள் மற்றும் அதனுடைய சிடி | அசல் |
| 10 | | **நீ ம சா ஆ 1** | ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் | அசல் |
| 11 | | **நீ ம சா ஆ 2** | ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் | அசல் |

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12 ம் வகுப்பு படித்துள்ளேன். என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். இந்த தாவாவை 1 ம் வாதி பழனிச்சாமி தான் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்திருந்தார். தாவா சொத்து 2 சொத்துக்கள் என்றால் ஒரே சொத்து ஆகும். தாவா ஏ அட்டவணை சொத்து 1 ம் வாதி கிரயம் பெற்ற சொத்து என்றால் சரிதான். முழுச்சொத்திற்கும் அந்த ஒரு கிரயம் தான்.

2) தாவா பி அட்டவணை சொத்து வண்டித்தடம் என்றால் சரிதான். இறந்து போன 1 ம் வாதி தாவா பி அட்டவணை வண்டித்தடத்தில் வசதியுரிமை பாத்தியம் உள்ளதாக அந்த சொத்துக்களை அவர் அனுபவித்து வருவதை தடுக்கக்கூடாது என்பதற்காக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் வாதிக்கு

ஒப்பம்/-(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

பி அட்டவணை சொத்தை பொறுத்து உரிமை உறுதி செய்திருந்தார் என்றால் விளம்புகை பரிகாரமும் கேட்டு வழக்கு தாக்கல் செய்திருந்தார். தாவா ஏ அட்டவணை சொத்தைப் பொறுத்து பரிகாரம் ஏதேனும் கேட்டுள்ளாரா என்றால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டுள்ளார். 1 ம் செய்யப்படுவதற்கு முன்பே தாவா ஏ அட்டவணை சொத்தை நான் கிரயம் பெற்றுவிட்டேன் என்றால் சரிதான்.

3) யார் யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் விஜயகுமார் மற்றும் அரசு அதிகாரிகள் மீது தாக்கல் செய்துள்ளேன். வடசித்தூர் முத்துசாமி கவுண்டர் மகன் மோகன்ராஜை எனக்கு தெரியும் என்றால் தெரியும். தாவா ஏ , பி அட்டவணை சொத்தின் முன்னால் உரிமையாளர் தான் மோகன்ராஜ் என்றால் சரிதான். அவருக்கும் எனக்கும் சுமூகமான உறவு முறை தான் உள்ளது என்றால் சரிதான். வேறு விரோதம் இல்லை.

**பிரதிவாதிதரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒப்பம்/−(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.